TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORMS

8075284

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(குற்றவியல் நடைமுறைச் சட்டம் 154 இன் கீழ்)

C

1. District / மாவட்டம்: புதுக்கோட்டை | PS / காவல்நிலையம்: ல.ஒ.த.பிரிவு | Year / ஆண்டு: 2023 | FIR No / மு.த.அ. எண்: 01 | Date / நாள்: 11.07.2023.

2. (i) Act சட்டம்: இ.த.ச. | Sections பிரிவுகள்: 102 மற்றும்
(ii) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 as amended in 2018 | Sections பிரிவுகள்: 7.
(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும் பிரிவுகளும்:

3. (a) Occurrence of Offence Day / குற்ற நிகழ்வு நாள் | Date from / நாள் முதல்: 11.07.2023 | Date to / நாள் வரை:
Time Period / நேர அளவு | Time from / நேரம் முதல்: 14.15 மணி | Time to / நேரம் வரை: 19.20 மணி
(b) Information Received at PS. Date / காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 11.07.2023 | Time / நேரம்: 20.45 மணி
(c) General Diary Reference: Entry No(s) / பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்: | Time / நேரம்:

4. Type of Information: Written/ Oral / தகவலின் வகை: எழுத்து மூலம் / வாய் மொழியாக: எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS / குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து செல்லும் திசையும் தூரமும்: திட்ட இயக்குநர் / இணை இயக்குநர் (மகளிர் திட்டம்) அலுவலகம், புதுக்கோட்டை, கிழக்கு 1 கி.மீ.
Beat Number / முறைக் காவல் எண்: | (b) Address / முகவரி:
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S. / இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்திருந்தால் அந்நிலைய காவல் நிலையத்தின் பெயர்: | District / மாவட்டம்:

6. Complainant /Informant (a) Name / குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: நி. பிரகாஷ் | (b) Father's/ Husband's Name / தந்தை / கணவர் பெயர்: [illegible]
(c) Date / Year of Birth: நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality / நாட்டினம்: இந்தியன் | (e) Passport No. / கடவுச்சீட்டு எண்:
Date of Issue: வழங்கப்பட்ட நாள் | Place of Issue / வழங்கப்பட்ட இடம்:
(f) Occupation: தொழில் | (g) Address / முகவரி: [illegible] ஆய்வுக்குழு அலுவலர், [illegible].

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவைப்படின் தனித்தாள் இணைக்கவும்)
திருமதி. ரேவதி, திட்ட இயக்குநர் / இணை இயக்குநர் (மகளிர் திட்டம்), புதுக்கோட்டை.

8. Reasons for delay in reporting by the complainant / informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையீட்டில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

<u>பணிந்து அனுப்பப்பட்டது :–</u>

இன்று (11–07–2023)ம் தேதி செவ்வாய்க்கிழமை பகல் 11.00 மணிக்கு திருச்சிராப்பள்ளி துணை ஆய்வுக்குழு அலுவலரும், புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குழுவினருடனும் சேர்ந்து மதியம் 14.15 முதல் 19.20 மணி வரை புதுக்கோட்டை மாவட்டம் திட்ட இயக்குநர்/இணை இயக்குனர் (மகளிர் திட்டம்) அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொண்டதை தொடர்ந்து இரவு 20.45 மணிக்கு திருச்சிராப்பள்ளி துணை ஆய்வுக்குழு அலுவலர் கொடுத்த புகார் மனு பின்வருமாறு :– அனுப்புனர் திரு.பிரகாஷ், வயது 48/2023, த/பெ. சரவணன் துணை ஆய்வுக்குழு அலுவலர், திருச்சிராப்பள்ளி, பெறுநர், காவல் துணைக்கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, புதுக்கோட்டை, அய்யா, இன்று (11–07–2023)ம் தேதி செவ்வாய்க்கிழமை பகல் 11.00 மணிக்கு திட்ட இயக்குநர்/இணை இயக்குனர் (மகளிர் திட்டம்) திட்டங்களை செயல்படுத்த சம்மந்தப்பட்ட பயனாளிகளிடம் கையூட்டு வாங்குவதாக காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்களுக்கு கிடைக்கப்பட்ட ரகசிய தகவலை எனக்கு தெரிவித்ததன் பேரில் நான் இன்று மதியம் 13.00 மணிக்கு புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு வந்து, பின்னர் இன்று மதியம் 14.00 மணிக்கு புதுக்கோட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு அலுவலகத்திலிருந்து நான் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக்கண்காணிப்பாளர் திரு.க.இமயவரம்பன், காவல் ஆய்வாளர் திரு.அ.பீட்டர் மற்றும் காவல் குழுவினருடன் புறப்பட்டு மதியம் 14.15 மணிக்கு புதுக்கோட்டை திட்ட இயக்குநர் / இணை இயக்குனர் (மகளிர் திட்டம்) அலுவலகத்திற்கு வந்து திடீர் ஆய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள பெரியார் நகர் செல்லும் சாலையின் வலதுபுறத்தில் கிழக்கு பார்த்த வாசலுடன் கூடிய பூமாலை வணிக வளாகம் அமைந்துள்ளது. அந்த அலுவலகத்தின் தரைத்தளத்தில் 16 சுய உதவிக் குழுக்களுக்கான கடைகள் இயங்கி வருகிறது. அந்த அலுவலகத்தின் போர்டிகோ வழியாக முதல் தளத்திற்கு செல்வதற்கான படிக்கட்டுகள் அமைந்துள்ளன, அந்த படிகட்டின் முடிவில் முதல் தளம் அமைந்துள்ளது, அத்தளத்தில் படிக்கட்டிற்கு நேர் எதிரே திட்ட இயக்குநர் / இணை இயக்குனர் (மகளிர் திட்டம்) அவர்களின் அறை அமைந்துள்ளது. மேற்படி திட்ட இயக்குநர் / இணை இயக்குனர் (மகளிர் திட்டம்) அவர்களின் அறைக்குள் சென்ற போது அங்கு திட்ட இயக்குநர் கிழக்கு பார்த்தவாறு இருக்கையில் அமர்ந்திருந்தார், அவருக்கு எதிரே ஒரு பெண் நின்று கொண்டிருந்தார். அப்போது திடீர் சோதனை குழு அலுவலர்கள் அடையாள அட்டையை

காண்பித்து தங்களை அறிமுகம் செய்து கொண்டு திடீர் சோதனை நடவடிக்கை பற்றி தெரிவித்து, திட்ட இயக்குநரிடம் விசாரித்த போது அவர் பெயர் திருமதி.ரேவதி என்றும் அவர் திட்ட இயக்குநராக பணிபுரிவதாக கூறினார். எதிரே நின்று கொண்டிருந்த பெண்ணை விசாரணை செய்த போது அவர் மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கத்தின் கணக்காளர் திருமதி.சரோஜினி (எ) ஷீலா என்று தெரிவித்தார். அவரை அங்கே இருக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. அவரும் அங்கு இருந்தார். அந்த அறையில் சோதனை மேற்கொள்ளப்பட்ட போது திடீர் ஆய்வுக்குழுவினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க திட்ட அலுவலர் அவரது மேஜையின் வலதுபுறத்தில் உள்ள கீழ் டிராயரில் இருந்த அவரது மெருன் கலர் பேக்கையும் அதற்கு அருகில் இருந்த ஊதா நிறத்தில் வெள்ளி நிற சிறு ஸ்டார் போட்ட பிளாஸ்டிக் பையையும் ஆஜர் செய்தார். அந்த பிளாஸ்டிக் பையில் நான்கு 500 ரூபாய் கட்டுகள் சிவப்புநிற ரப்பர் பேண்ட் போட்டு இருந்தது. அதில் ஒவ்வொரு கட்டிலும் 500ரூபாய் தாள்கள் 100 இருந்தது. நான்கு 500 ரூபாய் கட்டுகளிலும் சேர்த்து மொத்தம் ரூ.2,00,000/– (ரூபாய் இரண்டு இலட்சம்) (400X500) இருந்தது. அப்போது சுமார் 14.45 மணிக்கு, ஏற்கனவே தகவல் தெரிவித்ததன் பேரில் திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.சேவியர்ராணி அவர்கள் அங்கு வந்தார். மேலும் அவர் திட்ட இயக்குநர் ஆஜர் செய்த மெருன் கலர் ரெக்சின் கைபையை சோதனை செய்த போது அதிலிருந்த மருந்து மற்றும் மாத்திரைகள் இருந்தது. மேலும் அதில் ஜனனி ஜூவல்லர்ஸ், நாகர்கோவில் என்று வெள்ளை நிறத்தில் எழுதப்பட்ட பிங்க் கலர் சிறு பர்ஸ் இருந்தது. அதில் ரூ.7,260/– (14X500, 1x100, 2x50, 3x20) இருந்தது. மேற்கண்ட பணத்திற்கு விளக்கம் கேட்ட போது மேற்படி ரூ.2,00,000/– அவர் சீட்டு கட்டியதில் கிடைத்த வருமானம் மற்றும் அவரது சம்பளத்தில் சேமிக்கப்பட்டது என்றும் தெரிவித்தார். அதற்கான ஆவணங்கள் கோரிய போது உரிய ஆவணங்கள் மற்றும் விளக்கங்கள் ஏதும் கொடுக்காததால், அவரது விளக்கங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை, ஆகவே மேற்கண்ட பணம் சட்டத்திற்கு புறம்பாக அரசின் திட்ட பயனாளிகளிடமிருந்து கையூட்டு பெற்ற பணமாகும். அந்த பணம் திடீர் ஆய்வுக்குழு அலுவலராகிய என்னால் கைப்பற்றப்பட்டது. மேலும் ரூ.7,260/–ஐ அவரது மருந்து, மாத்திரை மற்றும் கைசெலவுக்காக வைத்திருப்பதாக கூறினார், அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு ரூ.7,260/– அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவரை விசாரிக்கும் போது அவரது கணவர் பெயர் சிவதாணுபிள்ளை என்றும், நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேசனில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டதாகவும், அவரது சொந்த ஊரான கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், வடிவீஸ்வரம், 20/33 கீழபள்ள தெரு என்ற முகவரியில் வசித்து வருவதாகவும், அவருக்கு சரவணன் என்ற மகன் இருப்பதாகவும், அவருக்கு திருமணமாகி தூத்துக்குடியில் குடியிருந்து வருவதாகவும்,

அவர் தூத்துக்குடி NDPL–ல் பணிபுரிந்து வருவதாகவும், ஜனனி என்ற ஒரு மகள் இருப்பதாகவும். அவரை நாகர்கோவிலைச்சேர்ந்த திருச்சி ரயில்வேயில் பணிபுரியும் ராஜகுமரன் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்திருப்பதாகவும் கூறினார். அவர் மாதம் ஒரு முறை சொந்த ஊரான நாகர்கோவிலுக்கு சென்று வருவதாக கூறினார். மேலும் மார்ச் 2021 முதல் புதுக்கோட்டையில் திட்ட இயக்குநாக (மகளிர் திட்டம்) பணிபுரிவதாக கூறினார்.

மேலும் அந்த மேஜையை சோதனை செய்த போது அலுவலக கோப்புகள் மற்றும் எழுது பொருட்கள் இருந்தது. அவரது இருக்கைக்கு வலது புறம் இருந்த மர ரேக்கின் மேல்தட்டில் Acer கணிணி, கீபோர்ட், மவுஸ் மற்றும் Milton பிளாஸ்க் மற்றும் ஒரு காலிங்பெல் இருந்தது, அதற்கு கீழ் இருந்த இரண்டு ரேக்குகளிலும் அலுவலக கோப்புகள் இருந்தது, அதற்கடுத்து இருந்த தெற்கில் கிழக்கு பார்த்தவாறு இருந்த இரண்டு அறைகள் கொண்ட ஒரு கப்போர்டு இருந்தது, அதில் ஒரு அறையில் மண்ணால் செய்யப்பட்ட ஜாடி மற்றும் இதரப்பொருட்களும், அலுவலக கோப்புகளும் இருந்தன, மேலும் அந்த கப்போர்டின் கீழ்தட்டில் ஏலம், கிராம்பு, சீரகம், மிளகு ஆகியவை அடங்கிய மதி என்ற நிறுவனத்தின் கிப்ட் பாக்ஸ்கள் 10 ம், பாதாம், முந்திரி, உலர்திராட்சை, பிஸ்தா ஆகியவை அடங்கிய மதி என்ற நிறுவனத்தின் கிப்ட் பாக்ஸ்கள் 10 ம், சிறுதாணியங்கள் அடங்கிய மதி என்ற நிறுவனத்தின் கிப்ட் பாக்ஸ்கள் 10 ம் இருந்தது. இது குறித்து திட்ட இயக்குநரிடம் விசாரித்த போது காஞ்சிபுரத்திலிருந்து மகளிர் சுய உதவிக்குழுவிடம் விற்பனை செய்வதற்காக மாதிரிகள் அனுப்பப்பட்டதாகவும், இதே மாதிரியான கிப்ட் பாக்ஸ்கள் புதக்கோட்டையிலேயே தயார் செய்யப்படுவதால், அவற்றை திருப்பி அனுப்ப வைத்திருப்பதாக கூறினார், அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. மேலும் அந்த கப்போர்டின் மற்றொரு அறையில் சிறு சிறு அட்டைப்பெட்டிகளும், A4 சீட்டுகளும் இருந்தது, அந்த அறையில் தென்கிழக்கு மூலையில் ஒரு சோனி டிவி இருந்தது. அந்த அறையின் கிழக்குபுற சுவரில் அலுமணியத்தாலான ஒரு கண்ணாடி ஜன்னல் உள்ளது. அந்த சுவரின் மேலே புளுஸ்டார் இன்வெட்டர் ஏசி ஒன்று பொறுத்தப்பட்டிருந்தது, அதற்கு கீழே பிராமிஸ் சுவர் கடிகாரம் ஒன்றும், அதற்கு கிழே 2x 2 1/2 அடி அளவுகள் உள்ள ஒரு வெள்ளை போர்டு இருந்தது, அந்த அறையின் வடக்கு புறத்தில் கழிப்பறை மற்றும் ஓய்வு அறை உள்ளது. பின்னர் அந்த அறைக்கு எதிரே மேற்கு பார்த்த வாயிலுடன் இருந்த அலுவலக பெரிய அறையை சோதனை செய்த போது, அறையின் முதலில் வடக்குப்புற சுவற்றில் கண்காணிப்பாளர் என்று போர்டு இருந்த இடத்தில் அமர்ந்திருந்தவரை விசாரிக்க அவர் பெயர் ஸ்டாலின்மணிக்குமார் என்று கூறினார், கண்காணிப்பாளராக

பணிபுரிவதாக கூறினார், அவாது மேஜை மற்றும் ரேக்குகளை சோதனை செய்யப்பட்டது அதில் அலுவலக கோப்புகள் இருந்தன, அவர் பையிலிருந்த ரூ.1,075/– எடுத்து ஆஜர் செய்தார், அது பற்றி விசாரித்தபோது அவர் சுகர் மாத்திரை வாங்குவதற்கும், கை செலவிற்கும் வைத்திருப்பதாக கூறினார். அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு பணத்தை அவரிடமே கொடுக்கப்பட்டது, அதற்கடுத்த இருக்கையில் இருந்தவரை விசாரிக்க அவரது பெயர் ஜெயக்குமார் என்றும், உதவி திட்ட அலுவலராக ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிவதாக கூறினார், அவரது இருக்கை. மேஜை மற்றும் பீரோ ஆகியவற்றை சோதனை செய்யப்பட்டது. அதில் அலுவலக கோப்புகள் இருந்தது. அவர் பையிலிருந்த ரூ.50/–யை எடுத்து ஆஜர் செய்தார், அது பற்றி அவரிடம் கேட்க கைசெலவுக்காக வைத்திருந்ததாக கூறினார், அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது, அதற்கடுத்த இருக்கையில் இருந்தவரை விசாரிக்க அவரது பெயர் ஜெயராமன் என்றும், உதவி திட்ட அலுவலராக (நிர்வாகம்) பணிபுரிவதாக கூறினார், அவரது இருக்கை. மேஜை மற்றும் பீரோ சோதனை செய்யப்பட்டது, அவரிடம் இருந்த ரூ.4,900/– எடுத்து ஆஜர் செய்தார், அது பற்றி கேட்க மேற்படி தொகையை அவர் வெளியூரிலிருந்து இங்கு தங்கி வேலை செய்வதால் அவரது சாப்பாட்டு செலவிற்காக வைத்திருந்ததாக கூறினார். அவாது விளக்கத்தில் முகாந்திரம் இருப்பதால் அப்பணம் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. அவருக்கு அருகில் கிழக்கு பார்த்தவாறு அமர்ந்திருந்தவரை விசாரிக்க அவர் அவரது பெயர் மதன் என்றும், ஒப்பந்த அடிப்படையில் கணினி இயக்குபவராக பணியுரிவதாக கூறினார், அவாது கணினி டேபிள் மற்றும் ரேக்கை சோதனை செய்த போது அலுவலக கோப்புகள் இருந்தது, மேலும் அவர் பேண்ட் பாக்கெட்டிலிருந்து ஆஜர் செய்த ரூ.415/– பற்றி கேட்க, கைசெலவுக்காக வைத்திருந்ததாக கூறினார், அவரது விளக்கத்தில் முகாந்திரம் இருப்பதால் அப்பணம் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது. அதற்கடுத்த இருக்கை காலியாக இருந்தது, இருப்பினும் அந்த இருக்கை சோதனை செய்யப்பட்டதில் அலுவலக கோப்புகள் இருந்தது.

அதற்கடுத்த இருக்கையில் இருந்தவரை விசாரிக்க அவரது பெயர் ஜான்லிங்டன் என்றும், உதவி திட்ட அலுவலராக ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிவதாக கூறினார், அவரது இருக்கை, மேஜை மற்றும் பீரோ சோதனை செய்யப்பட்டது, அவரிடம் இருந்த ரூ.250/– எடுத்து ஆஜர் செய்தார், அது பற்றி கேட்க கைசெலவுக்காக வைத்திருந்ததாக கூறினார், அவரது விளக்கத்தில் முகாந்திரம் இருப்பதால் அப்பணம் அவரிடமே திரும்ப கொடுக்கப்பட்டது, அந்த இருக்கைக்கு எதிர்புறம் காலியாக இருந்த இருக்கையை சோதனை செய்த போது அலுவலக கோப்புகள் இருந்தது, அந்த இருக்கையின் உதவி திட்ட அலுவலர் திருமதி.அமுதா என்பவர் களஆய்வுக்காக

கறம்பக்குடிக்கு சென்றிருப்பதாக கூறினார்கள். அதற்கடுத்தார்போல் இருந்தவரை விசாரிக்க அவர் சிவகாமிசுந்தரி என்றும், உதவியாளராக பணிபுரிவதாகவும் கூறினார். அவரது இருக்கை, மேஜை மற்றும் பீரோவை சோதனை செய்த போது அலுவலக கோப்புகள் இருந்தது, மேலும் அவர் மேஜை மேல் இருந்த அவரது கருப்புநிற லெதர் கைப்பையில் இருந்து எடுத்து ஆஜர் செய்த ரூ.27/– பற்றி விசாரிக்க அவர் பஸ் செலவிற்காக வைத்திருந்ததாக கூறினார். அவரது விளக்கத்தில் முகாந்திரம் இருப்பதால் மேற்படி பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அதற்கடுத்த இருக்கையில் அமர்ந்திருந்தவரை விசாரிக்க அவரது பெயர் செல்வக்குமார் என்றும் உதவியாளராக பணிபுரிவதாக கூறினார். அவரது மேஜை மற்றும் ரேக்கை சோதனை செய்த போது அலுவலக கோப்புகள் இருந்தது, அவரது சட்டைப்பையில் இருந்து எடுத்து ஆஜர் செய்த ரூ.30/–யை பற்றி விசாரிக்க அப்பணம் செலவுக்காக வைத்திருந்ததாக கூறினார், அவரது விளக்கத்தில் முகாந்திரம் இருப்பதால் மேற்படி பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அதற்கடுத்த இருக்கையில் அமர்ந்திருந்தவரை விசாரிக்க அவரது பெயர் ஜெயவேல்முருகன் என்றும் கணினி இயக்குநராக ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிவதாக கூறினார். அவரது மேஜை மற்றும் ரேக்கை சோதனை செய்த போது அலுவலக கோப்புகள் இருந்தது, அவரது பேண்ட் பாக்கெட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த ரூ.1,520/–யை பற்றி விசாரிக்க அப்பணம் அவரது குழந்தைக்கு மருந்து மற்றும் பால்பவுடர் வாங்க வைத்திருந்ததாக கூறினார், அவரது விளக்கத்தில் முகாந்திரம் இருப்பதால் மேற்படி பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவருக்கு அடுத்திருந்த பச்சை நிற இரும்பு பீரோவை சோதனை செய்த போது அதில் அலுவலக கோப்புகள் இருந்தது. மேலும் அந்த அறையின் மேற்கு சுவர் ஓரமாக இருந்த 3 இரும்பு பச்சை நிற பீரோக்களை சோதனை செய்ததில் அலுவலக கோப்புகள் இருந்தன.

அதற்கடுத்தாற்போல் அலுமினிய தடுப்பு செய்யப்பட்ட கணினி அறை உள்ளது. அந்த அறையில் பிளாஸ்டிக் சேரில் அமர்ந்திருந்த இளவரசி சமுதாய அமைப்பளார், புதுக்கோட்டை நகராட்சி, காயத்திரி சமுதாய அமைப்பாளர், கறம்பக்குடி ஆகியோரை தனித்தனியாக பெண் காவல் ஆய்வாளர் திருமதி.சேவியர் ராணி அவர்கள் முன்னிலையில் விசாரணை செய்ய, அவர்கள் அலுவலக அறிக்கைகள் கொடுக்க வந்ததாகவும், பணம் ஏதும் இல்லை என்றும் கூறினார்கள். மேலும் அங்கு அமர்ந்திருந்த புவனேஷ்வரி, வட்டார ஒருங்கிணைப்பாளர், திருமயம் என்பவரை பெண் காவல் ஆய்வாளர் திருமதி.சேவியர்ராணி அவர்கள் முன்னிலையில் விசாரணை செய்ய, அவர் ஏற்கனவே கொடுத்திருந்த அவார்டு பார்மில் இருந்த கரெக்ஷன் செய்து கொடுக்க பார்ம் வாங்கி செல்ல வந்ததாக கூறினார். மேலும் அவர் ஆஜர் செய்த ரூ.380/– பற்றி

விசாரிக்க, அவரது செலவுக்கு கொண்டு வந்திருப்பதாக தெரிவித்தார், அவரது விளக்கத்தில் முகாந்திரம் இருப்பதால் மேற்படி பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

அங்கு இருந்த பாண்டிமீனாள், சமுதாய பயிற்றுனர் என்பவரை பெண் காவல் ஆய்வாளர் திருமதி.சேவியர் ராணி அவர்கள் முன்னிலையில் விசாரணை செய்ய, அவர் லோன் கோப்பில் உதவி திட்ட அலுவலர் (நிர்வாகம்) அவர்களிடம் கையெழுத்து வாங்க வந்ததாக கூறினார். மேலும் அவர் ஆஜர் செய்த ரூ.1,050/– பற்றி விசாரிக்க, அவரது குழந்தைகளுக்கு யூனிபார்ம் எடுக்க கொண்டு வந்திருப்பதாக தெரிவித்தார், அவரது விளக்கத்தில் முகாந்திரம் இருப்பதால் மேற்படி பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அந்த அறையின் கிழக்குபுற சுவற்றின் ஓரமாக இருந்த கணினி இருக்கை காலியாக இருந்தது, தெற்குபுற சுவர் ஓரமாக இருந்த முதல் கணினி இருக்கையில் அமர்ந்திருந்த சுமதி, வெளிஒப்பந்தத்தில் கணினி இயக்குநர் என்பவரை பெண் காவல் ஆய்வாளர் திருமதி.சேவியர்ராணி அவர்கள் முன்னிலையில் விசாரணை செய்ய, அவர் வைத்திருந்த செய்த ரூ.20/– பற்றி விசாரிக்க, அவரது பஸ் செலவுக்காக வைத்திருப்பதாக தெரிவித்தார், அவரது விளக்கத்தில் முகாந்திரம் இருப்பதால் மேற்படி பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவருக்கு அடுத்தார்போல் இருந்த நபரை பற்றி விசாரிக்க அவர் சூர்யா என்றும், ஒப்பந்த அடிப்படையில் கணினி இயக்குநர் என்பவரை பெண் காவல் ஆய்வாளர் திருமதி.சேவியர்ராணி அவர்கள் முன்னிலையில் விசாரணை செய்ய, அவர் வைத்திருந்த செய்த ரூ.30/– பற்றி விசாரிக்க, அவரது பஸ் செலவுக்காக வைத்திருப்பதாக தெரிவித்தார், அவரது விளக்கத்தில் முகாந்திரம் இருப்பதால் மேற்படி பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவருக்கு அடுத்தார்போல் இருந்த நபரை பற்றி விசாரிக்க அவர் ரோஸ்லின் என்றும், ஒப்பந்த அடிப்படையில் கணினி இயக்குநர் என்பவரை பெண் காவல் ஆய்வாளர் திருமதி.சேவியர்ராணி அவர்கள் முன்னிலையில் விசாரணை செய்ய, அவர் வைத்திருந்த செய்த ரூ.410/– பற்றி விசாரிக்க, அவரது கைசெலவுக்காக வைத்திருப்பதாக தெரிவித்தார், அவரது விளக்கத்தில் முகாந்திரம் இருப்பதால் மேற்படி பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவருக்கு அடுத்தார்போல் இருந்த நபரை பற்றி விசாரிக்க அவர் தீபிகா என்றும், ஒப்பந்த அடிப்படையில் கணினி இயக்குநர் என்பவரை பெண் காவல் ஆய்வாளர் திருமதி.சேவியர்ராணி அவர்கள் முன்னிலையில் விசாரணை செய்ய, அவர் வைத்திருந்த செய்த ரூ.20/– பற்றி விசாரிக்க, அவரது பஸ் செலவுக்காக வைத்திருப்பதாக தெரிவித்தார், அவரது விளக்கத்தில் முகாந்திரம் இருப்பதால் மேற்படி பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவருக்கு அடுத்தார்போல் இருந்த நபரை பற்றி விசாரிக்க அவர்

தனலெட்சுமி என்றும், ஒப்பந்த அடிப்படையில் கணினி இயக்குநர் என்பவரை பெண் காவல் ஆய்வாளர் திருமதி.சேவியர்ராணி அவர்கள் முன்னிலையில் விசாரணை செய்ய, அவர் வைத்திருந்த செய்த ரூ.4,100/– பற்றி விசாரிக்க, அவர் சூர்யா சுய உதவிக்குழுவில் பெற்ற கடனிற்கு மாதாந்திர தவனை செலுத்துவதற்காக வைத்திருப்பதாக தெரிவித்தார், அவரது விளக்கத்தில் முகாந்திரம் இருப்பதால் மேற்படி பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இந்த திடீர் சோதனையின் போது ஆவணங்கள் ,எதுவும் கைப்பற்றப்படவில்லை.

திட்ட இயக்குநர் / இணை இயக்குனர் (மகளிர் திட்டம்) திருமதி.ரேவதி என்பவரிடமிருந்து திடீர் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.2,00,000/– த்தை தங்களிடம் ஒப்படைக்கிறேன். அந்த பணம் திருமதி.ரேவதி கையூட்டு பெற்ற பணம் என்பதால் அவர் மீது நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொண்டு ஒரு புகார் மனு அளிக்கிறேன். Sd.xxxxx 11/07/2023 (எஸ்.பிரகாஷ்) மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், திருச்சிராப்பள்ளி.

Sir, Received a complaint with seized money in the proceedings cum Mahazar from Dy.ICO, Trichy on 11.07.2023 and registered as a case in Pudukkottai V&AC Cr.No.01/2023 U/s 102 Cr.PC and 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018 by me on 11.07.2023 at 20.45 hrs. Sd.xxxxx 11/07/2023 (க.இமயவரம்பன், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, புதுக்கோட்டை)

The Original FIR sent to the Hon'ble Chief Judicial Magistrate Court and other copies were sent to the Superiors.

11/7/23

[க.இமயவரம்பன்]

காவல் துணைக் கண்காணிப்பாளர்

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு

புதுக்கோட்டை.